# டில்லியில் பேச்சுக்கள் செப்டம்பர் 12-ல் ஆரம்பம்
# கொழும்பிலிருந்து மூன்று அமைச்சர்கள் செல்வர்

Registered as a Newspaper in SriLanka. விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 3 28-8-86 வியாழன் (ஆவணி 12 துல்ஹஜ 21) முழக்கம் 205

கொழும்பில் நடைபெறும் இனப்பிரச்சினைப் பேச்சுவார்த்தையின் அடுத்த கட்டப் பேச்சுக்களை டில்லியில் நடத்த இலங்கையின் மூன்று அமைச்சர் குழுவொன்று செப்டம்பர் இரண்டாம் வாரத்தில் அங்கு செல்லும். அமைச்சர்கள் லலித் அத்துலத்முதலி, ஏ. சி. எஸ். ஹமீட், காமினி திஸ்ஸநாயக்கா ஆகியோர் இக்குழுவில் இடம்பெறுவர் எனத் தெரிகின்றது. நாளை மறுதினம் சென்னை திரும்பும் கூட்டணிக் குழுவினர் செப்டம்பர் 8-ம் திகதியளவில் டில்லிக்குச் செல்லலாமென்று தெரிகின்றது. பிரதமர் ராஜீவ் காந்தி, வெளிவிவகார அமைச்சர் சிவ்சங்கர் உட்பட இலங்கைப் பிரச்சினையுடன் சம்பந்தப்பட்ட முக்கியஸ்தர்கள் அணிசேரா மாநாட்டில் பங்குபற்றியபின் செப்டம்பர் 7-ம் திகதியே கொழும்பு திரும்புவர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சென்னையிலுள்ள போராளிகள் இயக்கத் தலைவர்களும் டில்லிக்கு இந்த நாட்களில் அழைக்கப்படலாமென்று தெரிவிக்கப்பட்டது.

## நேற்றைய 'ஷெல்' தாக்குதலால்

# மத்திய கல்லூரியும், மெதடிஸ்த தேவாலயமும் பலத்த சேதம்

## மத்திய கல்லூரி மூடப்படும் நிலையில்!

கோட்டை ராணுவ முகாமிலிருந்து நேற்றும் எவ்வித காரணமுமின்றி பொதுமக்கள் வாழும் பகுதிகளை நோக்கியும், பாடசாலைகள், தேவாலயம் போன்ற இடங்களை நோக்கியும் சரமாரியாக ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

காலையிலிருந்து மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதல்களால் யாழ். மத்திய கல்லூரி மேலும் சேதமடைந்துள்ளது. கல்லூரியின் மத்தியில் ஷெல் ஒன்று விழுந்து வெடித்ததால் சுற்றிவர இருந்த கட்டடங்கள் பலத்த சேதமடைந்ததுடன் பிரதான தண்ணீர் பைப் ஒன்றும் உடைந்துள்ளது.

யாழ். மத்திய கல்லூரிக்கு அருகேயுள்ள மெதடிஸ்த தேவாலயம் மீதும் கோட்டையிலிருந்து இரண்டு தடவைகள் ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. இவற்றில் ஒன்று தேவாலய கட்டடத்தில் விழுந்து வெடித்ததால் தேவாலய கட்டடம் பலத்த சேதமடைந்தது. மற்ற ஷெல் வெடிக்காமலேயே மண்ணில் புதைந்திருந்தது.

கொட்டடிப்பகுதியைநோக்கி மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதல்களால் ஒரு சில வீடுகள் சேதமடைந்துள்ளதாகவும் தெரியவருகிறது. இதனைத் தவிர மேலும் பல இடங்களில் 'ஷெல்' விழுந்து வெடித்த போதிலும் பெரியளவிலான சேதங்களோ உயிரிழப்புக்களோ ஏற்படவில்லை.

## 50 சத ஈழம் தபால் தலை அடுத்தவாரம் வெளிவரும்

ஐம்பது சதம் பெறுமதியான 'ஈழம்' தபால் தலைகளை ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி அடுத்த வாரத்திலிருந்து பொதுமக்களுக்கு விற்பனைக்கு விடவுள்ளது.

குடாநாட்டுக்குள் பாவிப்பதற்கென இவை தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், ஒவ்வொருவரும் மிகச் சுலபமாக இதனைப் பெறப் பூரண ஒழுங்கு மேற்கொள்ளப்படுமென்றும் 'முன்னணி' அறிவித்துள்ளது.

தொலைத்தொடர்புகள், போக்குவரத்துகள் குறைந்த பின் தங்கிய கிராமப்புறங்களுக்கான தபால் சேவை, 'தபால் தலைகளைப் பெறுவதிலுள்ள சிரமங்கள், கிராம நகர இடைவெளிகளால் ஏற்படும் விலையேற்றம், இதுபோன்ற தபால் சேவை எதிர்நோக்கும் பல்வேறு நெருக்கடிகளைத் தீர்ப்ப

...6ஆம் பக்கம் பார்க்க

## உதுமா லெப்பை எம். பீக்கு எதிராக வழக்கு தாக்கல்!

பொத்துவில் எம். பி. ஜனாப் உதுமா லெப்பையின் நியமனத்தை ரத்துச் செய்யக்கோரி கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

ஜனாப் உதுமா லெப்பை எம். பி. ஆக நியமனம் செய்யப்பட்டபோது பாடசாலை ஒன்றின் அதிபராக இருந்தவரென்றும், எம். பி ஆக நியமனம் பெற்ற பின்னரும் ஒரு மாத அதிபர் சம்பளத்தை அவர் பெற்றதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

ஜே. லெப்பை அகமட் என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட இவ் வழக்கு அடுத்த மாதம் 15-ம் திகதி விசாரணைக்கு எடுக்கப்படும்.

## இரத்த தான நிகழ்ச்சி

யாழ் அரசினர் வைத்திய சாலையின் அவசரத் தேவைகளுக்குப் பயன்படுத்துவதற்கு இரத்தத்தைச் சேமிக்கும் நோக்குடன் நல்லூர் கந்தசாமி கோவில் உற்சவ தினங்

—6ஆம் பக்கம் பார்க்க

## வெள்ளி, ஞாயிறில் மட்டும் கிளிநொச்சி வரை ரயில்

வடபகுதிக்கான யாழ் தேவி ரயில் சேவைகள் இனிமேல் வாரத்தின் வெள்ளி, ஞாயிற்றுக்கிழமைகளில் கிளிநொச்சி வரை நடாத்தப்படுமெனபுகையிரதத்திணைக்களம் அறிவித்துள்ளது. வெள்ளி, ஞாயிறு தவிர்ந்த வாரத்தின் ஏனைய நாட்களில் வடபகுதிக்கான யாழ் தேவி ரயில் சேவை தற்பொழுது நடை பெறுவது போன்று வவுனியா வரையுமே நடாத்தப்படும்.

புதிய அறிவிப்பின்படி பிரதி வாரமும் வெள்ளிக்கிழமைகளிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும் காலை 5 50க்கு மருதானையிலிருந்து புறப்படும் யாழ்தேவி ரயில் நண்பகல் பன்னிரெண்டு மணிக்கு கிளிநொச்சியை அடையும். பின்னர் பிற்பகல் 1.20க்கு கிளிநொச்சியிலிருந்துபுறப்

—6ஆம் பக்கம் பார்க்க

## தீயணைப்புப்படை 22343

நல்லூரிலுள்ள தீயணைப்புப் படை|அலுவலகத்துக்கு நேற்று முதல் நேரடித் தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. இதன் இலக்கம் 22343 ஆகும்.

### மக்கள் நடவடிக்கைக் குழுவை

## ஜனாதிபதியைச் சந்தித்து பேச கொழும்பு வருமாறு அழைப்பு!

கோட்டை ராணுவமுகாமை அகற்றுவது தொடர்பாக ஆராய்வதற்காக ஜனாதிபதியை கொழும்பில் வந்து நேரில் சந்திக்குமாறு ஜனாதிபதியின் செயலாளர் யாழ். மக்கள் நடவடிக்கைக்குழுவினரை அழைத்துள்ளார்.

கோட்டைராணுவமுகாமை அகற்றுமாறுகோரி யாழ்நகரில் நேற்று நடைபெற்ற மௌன ஊர்வலத்தின் பின்னர் மகஜர் ஒன்று யாழ். அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டது. இப் பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதியுடன் தொடர்பு கொண்டு உடனடியாகத் தமக்குப் பதில் பெற்றுத்தருமாறு மக்கள் நடவடிக்கைக் குழுவினர் கேட்டுக்கொண்டதால் அரச அதிபர் ஜனாதிபதி செயலகத்துடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டார்.

இச் சந்தர்ப்பத்திலேயே

—6ம் பக்கம் பார்க்க

## நேற்றிரவும் ராணுவ முயற்சி தோல்வி

(வண்ணார்பண்ணை)

நேற்றிரவு கோட்டை இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினர் தவழ்ந்து வந்து சுப்

— 6ஆம் பக்கம் பார்க்க

### நல்லூர் உற்சவத்துக்காக

## பாடசாலைகளை தாமதமாக திறக்க பணிப்பாளர் அனுமதி

அடுத்த மாதம் முதலாம் திகதி திங்கட்கிழமை முதல் மூன்றாம் தவணைக்காக பாடசாலைகள் ஆரம்பமாவதால் நல்லூர் கந்தசுவாமி கோயிலை அண்டிய பாடசாலைகளை அத்திருவிழா முடியும்வரை திறக்காமல் செப்டெம்பர் எட்டாம் திகதி திங்கட்கிழமை மூன்றாம் தவணையை ஆரம்பிப்பதற்கு யாழ். கல்வி பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம் அனுமதி வழங்கியுள்ளார்.

நல்லூர் உற்சவத்தையொட்டி இப்பகுதியிலுள்ள

— 6ஆம் பக்கம் பார்க்க

## பெண்கள் அதிகம் பங்கேற்ற நேற்றைய மௌன ஊர்வலம்

கோட்டைராணுவமுகாமை அகற்ற வேண்டுமெனக் கோரி யாழ்நகரில்நேற்றுநடைபெற்ற மௌன ஊர்வலத்தில் பெருமளவு பெண்கள் உட்பட சுமார் மூவாயிரத்திற்கும் அதிகமானோர் கலந்து கொண்டார்கள்.

யாழ். புகையிரத நிலையம் முன்பாக காலை பத்து மணிக்கு ஆரம்பமான இவ்வூர்வலம் ஸ்ரேஷன் வீதியூடாகச் சென்று பிரதான வீதியை அடைந்து அங்கிருந்து யாழ். அரசாங்க செயலகத்தைச் சென்றடைந்தது.

—6ம் பக்கம் பார்க்க

## வயாவிளான் ராணுவ முகாம் வார இறுதியுள் மூடப்படும்

(சுன்னாகம்)

வயாவிளான் இராணுவ முகாமை இவ்வார இறுதிக்குள் மூடுவதற்கான துரித நடவடிக்கைகள் எடுக்கபபட்டு வருகின்றன

ஹெலிகப்டரின் ரோந்துப் பாதுகாப்புடன் வயாவிளான் முகாமிலிருந்து படையினரின் பல பொருட்கள் நேற்றும், நேற்று முன்தினமும் பலாலி முகாமுக்கு எடுத்துச் செல்லப்பட்டன.

—6ம் பக்கம் பார்க்க

## கும்பாபிஷேகம்

(வேலணை)

ஊர்காவற்றுறை புளியங் கூடல் அருள்மிகு இந்தன் முத்து வினாயகர் ஆலய புனருத்தாரண மஹாகும்பாபிஷேக வைபவம் அடுத்தமாதம் எட்டாந்திகதி திங்கட்கிழமை நடைபெறவிருக்கின்றது.

## கந்தபுராண சொற்பொழிவு

நல்லூர் திருவிழாவையொட்டி, மேற்குவீதியிலுள்ள விநாயகர் மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கு கந்தபுராணம் பற்றி பிரமஸ்ரீ சிவவை. நித்தியானந்த சர்மா சொற்பொழிவாற்றுவார்.

## செங்குந்தாவில் முதலாம் வகுப்பு

திருநெல்வேலி செங்குந்த இந்துக் கல்லூரியில் 1987 ஜனவரி முதல் முதலாம் வகுப்பை (ஆண்டு ஒன்று) மீண்டும் ஆரம்பிப்பதற்கு கல்விப்பணிப்பாளர் திரு இ. சுந்தரலிங்கம் அனுமதி வழங்கியுள்ளார்.

இங்கு முதலாம் வகுப்பை ஆரம்பிக்க வேண்டிய அவசியத்தை பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகளைக் கொண்ட தூதுக்குழுவொன்று பாடசாலை அதிபர் திரு எம். சண்முகலிங்கம் தலைமையில் கல்விப்பணிப்பாளரை இரண்டு மாதங்களுக்கு முன் சந்தித்து வலியுறுத்தியிருந்தது.

கல்விப்பணிப்பாளர் கடந்த வாரம் இதற்கு எழுத்து மூலம் அனுமதி வழங்கினார்.

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### புதிய மாணவர்கட்கான ஆங்கிலத் தகுதிகாண் பரீட்சை - 1986

யாழ். பல்கலைக்கழகத்திற்கு இவ்வாண்டு (1986/87) அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கு ஏற்கனவே நடாத்தப்பட்ட ஆங்கிலத் தகுதிகாண் பரீட்சைக்கு சமூகம் தராதவர்கட்கு மீண்டும் ஒருமுறை 3-9-86ல் பல்கலைக் கழகத்தில் மேற்படி பரீட்சை காலை 9 மணிக்கு நடாத்தப்படும். இதற்கு அவர்கள் தவறாது சமுகமளிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

புதிய மாணவர்கட்கான ஆங்கில வகுப்புக்கள் தற்போது பல்கலைக்கழகத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

பதிவாளர்

26-8-86 B/1496

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

### பகுதி நேர, முழு நேர பட்டப்பின் டிப்ளோமா (கல்வி) அனுமதிப் பரீட்சை 1986

மேற்குறிப்பிட்ட பரீட்சை 14-9-86ல் பல்கலைக்கழகத்தில் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும்.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதிப் பத்திரங்கள் தபால் மூலம் அனுப்பப்படும்.

B/1495 பதிவாளர்

## புகார்

(சுண்டுக்குளி)

1973ம் ஆண்டிலிருந்து 1980ம் ஆண்டு வரையிலான எட்டு வருட கால அரச நன்கொடைப் பணம் புங்குடுதீவு பாரதி சன சமூக நிலையத்திற்கு இதுவரையும் வழங்கப்படவில்லையென்று யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளரிடம் யாழ். மாவட்ட சன சமூக நிலையங்களின் சமாஜப் பொதுச் செயலாளர் திரு. சி. சி வரதராசா புகார் தெரிவித்துள்ளார்.

## வரி விளம்பரம்

### HOTEL VACANCIES

Accountants, Chefs, Cooks, Receptionists of Superb personality. Call soon with Bio-data, Photostats of Passport-entries, Certificates of qualifications and experience.

Dr. T. VISWANATHAN, "Rajasthan", Keerimalai Road, Sandilipay.

R/25356




❀ சங்கத்தானை, லட்சுமிகாந்தன் அம்பிகாதேவி தம்பதிகளின் மகன் ஜிதேந்திரா இன்று தனது ஆறுவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

❀ மட்டுவில் தெற்கு, வளர்மதி வீதி, கணபதிப்பிள்ளை மகேஸ்வரி தம்பதியின் மகன் அஜந்தன் ஆறுவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❀ கைதடி, தியாகராஜா தவமணி தம்பதியினரின் மகன் சுவர்ணன் இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

❀ நாவாந்துறை வடக்கு, மிக்கேல்தாஸ் மேரி யோசேப்பின் தம்பதியின் மகள் மைக்ரீஸ் மில்டன் ஐந்தாவது பிறந்த நாளைக் கொண்டாடுகிறார்.

## பிரயாண ஒழுங்குகள்

★ டென்மார்க்,

★ சவூதி அரேபியா

1. டென்மார்க் செல்ல விரும்புவோருக்கு ஓர் அரிய சந்தர்ப்பம். எமது முகவர் உங்களை டென்மார்க்கிற்கு நேரடியாக அழைத்துச் செல்வார். செல்ல விரும்புவோர் உடனடியாக எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

2. சவூதி அரேபியா செல்ல விரும்புவோருக்கு Janitors (கிளீனர்), Painters for Buildings (கட்டடத்திற்கான பெயின்ரர்), Electricians Building (எலெக்ரிஷன்ஸ்), Masons (மேசன்), Shutring Carpenters (காப்பென்ரர்), Plumbers (பிளம்பர்) Gardeners (விவசாயத் தொழிலாளர்)

ஆகிய உடனடி வேலைவாய்ப்புகள் எம்மிடம் உண்டு. 21 வயதிற்கு மேற்பட்டோர் 10 படங்களுடனும், பாஸ்போட்டுடனும் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

3. யூனிவர்சிற்றி கிளீனர், ஆஸ்பத்திரி கிளீனர்.

வேலை வாய்ப்புகளுக்கு 25 வயதிற்கு மேற்பட்டோர் 15 படங்களுடனும், பாஸ்போட்டுடனும் உடன் தொடர்பு கொள்ளவும். (Open Visa)

தொடர்புகொள்ள வேண்டிய முகவரிகள்:

**T. இந்திரநாதன்**

"சற்குண வாசா" சோதி லேன், கல்லூரி வீதி, காங்கேசன்துறை.

96, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.

பஸ் வழி இலக்கம்: 769.

R/25363

## 2-வது வருட நினைவு



### திருமதி பிரான்சிஸ் வரோணிக்கம்மா

தோற்றம் 22-4-1951 மறைவு 28-8-1984

ஆண்டுகள் இரண்டு ஆயிற்றே
ஆனந்தம் எங்களில் போயிற்றே
மாண்டநாள் இருந்து பிள்ளைகள்
மாறொடு நாங்களும் வாடுகிறோம்
ஆண்டவன் தீர்ப்பு என்பதால்
ஆரிதை வெல்லவே முடிந்திடும்
வேண்டுதல் கணவரும், பெற்றோரும்
வரோணிக்கா ஆத்ம சாந்திக்கே!

இவவின் பிரிவால் துயருறும்:
கணவன், பிள்ளைகள், நிஷாந்தினி, பிரியாந்தினி பெற்றோர், சகோதர, சகோதரிகள்.

17/6, மத்திய கிழக்கு வீதி, குருநகர்.

R/25355

## "தொழிற் பயிற்சிகள்"

வெளிநாடுகளிலும் உள்நாட்டிலும் இலகுவாக வேலைவாய்ப்பை பெறுபவர்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்.

★ **ரெலிவிஷன், வீடியோ டெக் றேடியோ, றிப்பியறிங்,**

சகல இன ரெலிவிஷன், டெக் திருத்தும் முறை, றேடியோ திருத்தும் முறை இரண்டு மாத முழுநேர செய்முறைப் பயிற்சியுடன் பயிற்சியளிக்கப்படும்.

காலம்:- 4 மாதம் முழுக்கட்டணம் 400/-

★ **Computer Programming**

(Basic Language)

Radio Shach, B. B. C., Commoder Computer களில் 50 மணித்தியாலத்திற்கு மேல் செய்முறைப் பயிற்சியளிக்கப்படும்.

காலம்:- 4 மாதம் முழுக்கட்டணம் 400/-

★ **Diploma in Draughtsmanship**

காலம்:- 5 மாதம் முழுக்கட்டணம் 300/-

★ **றீவைண்டிங்**

ரான்ஸ்போமர், மோட்டர், மின்விசிறி, றீவைண்டிங் செய்யும் முறை பயிற்சியளிக்கப்படும்.

காலம்- 3 மாதம் முழுக்கட்டணம் 400/-

★ **எலக்ரிக்கல் வயறிங்**

காலம்:- 2 மாதம் முழுக்கட்டணம் 250/-

குறிப்பு:-

(1) O/L சித்தியடைந்த இருபாலாரும் சேரலாம்.

(2) வகுப்புகள் சனி, ஞாயிறு, கிழமை நாட்கள் நடைபெறும்.

(3) பயிற்சியின் முடிவில் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட LONDON BASED CERTIFICATE வழங்கப்படும்.

(4) விண்ணப்பத்தை 30-08-86க்கு முன் விண்ணப்பிக்கவும்.

நெல்லியடி, சாவகச்சேரியில் உள்ள எமது கிளை நிறுவனத்திலும் மேல் கூறிய குறைந்த கட்டணத்தில் பயிற்சியளிக்கப்படும்.

மேலதிக விபரங்களிற்கு:

# Jaffna Technical Institute

52/1, ஸ்ரான்லி வீதி, (றெயில்வே கடவை அருகாமை) யாழ்ப்பாணம்.

தபாற்கந்தோர் வீதி, (தபால் கந்தோர் அருகாமை) நெல்லியடி.

141, கண்டி வீதி, (யூனியன் பேக்கறி அருகாமை) சாவகச்சேரி.

R/25330

★ இன்று ரதோற்சவம்

## பொன்னாலை

## ஸ்ரீ வரதராஜப் பெருமாள்

பாற்கடல் தனிலே சயனமதில் துயிலும் மாலாகிய விஷ்ணு மூர்த்தியின் மகிமை மிக்க தலங்கள் இந்தியாவில் இரண்டாகும். ஒன்று திருப்பதி. மற்றொன்று ஸ்ரீரங்கம். நம் ஈழத்திருநாட்டில் அத்தகைய தலங்கள் இரண்டே ஆகும். அவற்றுள் ஒன்று வல்லிபுரக்கோயில். சிறப்பும், தலபெருமையும் மிக்க பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயம் மற்றொன்று. திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் போன்ற சிவத்தலங்கள் திருமுறைப்பாடல் பெற்ற தலங்களாக விளங்கிய பொழுதும், வரலாற்றுப் பெருமையும் பழமையும் அதிசயமும் வாய்ந்த பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயம் வரலாற்றுப் பெருமையில் இவ்விரு தலங்களுக்கும் சளைத்ததல்ல. இவ்வாலயத்தில் தலபுராண மகிமை குதமாமுனிவர் தமது சீடர்களுக்குக் கூறிய கீழ்வரும் 'பொன்னாலைப் பெருமை' என்ற தலைப்பின் கீழான போனையிலிருந்து தெளிவாகும்.

''முன்னொரு காலத்தில் தேவபதியாகிய தேவேந்திரன் துர்வாசமுனிவருடைய சாபத்தினால் பூலோகத்திலே மீன் பிடிக்கும் தொழிலைக் கொண்டவனாகப் பிறக்கும்படி சபிக்கப்பட்டான். தேவேந்திரன் கோபமுனியிடம் தன் பிழை பொறுக்குமாறும் சாபவிமோசனம் அருளுமாறும் இறைஞ்சுதலும், துர்வாசமுனி அவன் மீது கருணைகூர்ந்து ''ஈழத்திலே பொன்னாலயம் என்னுமோர் ஊர் உண்டு. அங்கே வலைஞர் குலத்திலே நீ நீசப்பிறப்படைவாய். பரந்தாமனாகிய ஸ்ரீ விஷ்ணு ஒரு காலத்தில் கூர்வாமதாரம் செய்வார். அந்த கூர்மத்தின் அங்கம் உன் தேகத்தில் தீண்டப்பட்டவுடனேயே உனது சாபம் நீங்கப் பெறுவாய்'' என சாபவிமோசனமருளினார். அவ்வாறே இந்திரனும் பொன்னாலயம் என்னும் ஊரிலே வலைஞர் குலத்திலே பிறந்தவனாகி பராயமடைந்ததும் தன் குலத்தொழில் செய்வோனாகி பொன்னாலயத்தின் மேல் கரையில் நின்றும் தனது வலையை வீசினான். அங்ஙனம் வலையை வீசுதலும் அவ்வலையில் ஒரு பிரமாண்டமான ஆமை வசப்பட்டது. அவன் வலையினைக் கரை நோக்கி வலித்தும் தன்னால் அவ்வாமையானது தூக்கவொண்ணாப் பாரமுடையதென்று கண்டு அதனை வலையுடனே அவ்விடத்திலேயே விட்டு தன்னினத்தவரிடையே சென்று இதனைக் கூறலும் அவர்கள் எம் இனைஞனுக்கு உதவுவோம் என்று சமுதத்திரக் கரையை அடைந்து எல்லோரும் முயன்றும் ஆமையினைத் தூக்க முடியாது நின்று, இஃதென்ன புதுமையாயிருக்கிறது என மலைத்தனர். அச்சமயம் ஆகாயத்திலே பொன் விமானம் ஒன்று தேன்றியது. தேவேந்திரனுடைய சாபம் நீங்குதற்பொருட்டு ஆமை வடிவாகவந்த ஸ்ரீவிஷ்ணு தனது சுயவடிவத்தை இந்திரனுக்குக் காட்டி பொன் விமானத்திலேறி மறைந்தருளினார் ஆமை கிடந்த இடத்திலே ஸ்ரீவிஷ்ணுவின் திருவடிச் சுவடு பதிந்திருந்தது இதனையே திருவடிநிலை என்று பின்னர் வழங்குவதாயிற்று என்பர். இந்திரனும் தனது சாபம் நீங்கி அமரருலகை அடைந்தான்.

மீண்டும் ஆமை இருந்தவிடத்தை நோக்கிய வலைஞர் அது கல்லாக மாறியிருக்கக் கண்டு மேலும் அதிசயித்து ஸ்ரீவிஷ்ணுவின் லீலையினை நினைந்து நினைந்து உருகியவராய் அவ்விடத்தில் ஒரு கோவிலை அமைத்து வழிபடல் தகும் என ஒரு விஷ்ணு ஆலயத்தை அமைத்து வழிபட்டனர். ஆசாரமுறைப்படி தலமூர்த்திக்கு ஸ்ரீ வரதராஜப் பெருமான் என்ற நாமகரணமும் விதிமுறைப்படி நடந்தேறியது.

கி பி 2ம் நூற்றுண்டில் இவ்வாலயம் இருந்தது என்பதற்கு உடுவிலைச் சேர்ந்த டானியல் ஜோன் என்பவருடைய 'யாழ்ப்பாணச் சரித்திரம்' என்ற நூலில் காணப்படும் பின்வரும் பகுதி ஆதாரமாகிறது. 'அக்காலத்தில் நெடுந்தீவை ஆண்ட வெடியரசனது தம்பி வீரநாராயணன் காரைநகரில் உள்ள வேரப்பிட்டி என அழைக்கப்படுமிடத்திலமைந்த இருமிஞ்சி மலை என்னும் தோட்டத்திலான ராசதானியில் இருந்து அரசாண்டான். அவனது ஆட்சியில் வட்டுக்கோட்டை, கோட்டைக்காடு, மூளாய், தொல்புரம், பொன்னாலை என்பன அடங்கியிருந்தன. தினமும் குதிரையில் அவன் வந்து பொன்னாலையில் உள்ள மகாலக்குமியை வணங்கிச் செல்வான். இக்கோவிலை ஏழு வீதிகளுடன் அமைப்பித்தான்'' என ஜோனுடைய யாழ்ப்பாணச் சரித்திரம், 8ம் பக்கத்தில் கூறப்பட்டுள்ளது. இதே சமயம் 'கோகுல சந்தேச' (குயில்விடு தூது) என்ற சிங்களக் காவியம் இவ்வாலயத்தை குளக்கோட்டன் என்னும் மன்னன் ஏழு வீதிகளுடன் அமைப்பித்தானென உரைக்கின்றது என முரண்பாடாகக் கூறினாலும், இரு கூற்றுக்களுமே ஆலயத்தின் தொன்மையினையே பறைசாற்றுகின்றது.

கி பி. 1865 தொடக்கம் 1885 வரையும் இவ்வாலயத்தில் 7 திருவிழாக்களும், 1885 முதல் 1912 வரை 12 திருவிழாக்களும் இடம்பெற்று வந்துள்ளதாக அறியக்கிடக்கின்றது அதன்பின்னர் தற்பொழுது 16 திருவிழாக்களும், 17வது நாளாகிய ஆவணிமாத ரோகிணி நட்சத்திரம் கூடும் நாளில் தேர்த் திருவிழாவும், 18ம் நாளில் திருவடி நிலையில் கடற் தீர்த்தமும் நிகழ்ந்து வருகின்றது.

நாமும் சர்வலோக இரட்சகனாகவும், புருஷோத்தமக் கடவுளாகவும் விளங்கும் புண்ணிய மூர்த்தியாகிய பொன்னாலை, ஸ்ரீ வரதராஜப் பெருமானை வணங்கி பிறவித் துன்பம் நீங்க வழிபடுவோமாக.

கா. சந்திரராசா

## மண்டலாபிஷேக பூர்த்திவிழா

(யாழ்ப்பாணம்)

வண்ணார்பண்ணை அருள்மிகு ஸ்ரீவிஸ்வலிங்க மகா கணபதி கோவில் (பன்றிக்கோட்டுப் பிள்ளையார் கோவில்) மண்டலாபிஷேகம் பூர்த்திவிழா எதிர்வரும் சனிக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

## கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

அளம்பில் திருமுருகபுரம் அருள்மிகு முருகன் ஆலய சுயம்புரோக்ஷண மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

★ இலங்கை அரசிடம் கூட்டணி வற்புறுத்தல்

# அடுத்த சந்திப்பு: போராளி குழுக்களும் வேண்டும்!

(சென்னை)

இலங்கை இனப்பிரச்சினை தொடர்பான அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் போது தமிழ்ப் போராளிகள் குழுக்களும் இடம்பெற வேண்டும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி இலங்கை அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளது.

கூட்டணியின் செயலதிபர் திரு. ஏ. அமிர்தலிங்கம் இத்தகவலை பி. ரி. ஐ செய்தித்தாபனத்திடம் வெளியிட்டார்.

தற்போது நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகள் தீர்வுக்கான அறிகுறிகளாக உள்ளனவா? என வினவப்பட்டபோது தற்போதைய நிலையில் இறுதி முடிவு எதுவும் இருக்காது என்று அவர் பதிலிறுத்தார்.

தற்போதைய பேச்சுவார்த்தைகள் எதிர்வரும் வெள்ளிக்கிழமை பூர்த்தியடையும் என்று கூறிய அவர், 'அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இலங்கைக்கு வெளியே அநேகமாக பாரதத்தில் நடைபெறலாம் என்றும் தெரிவித்தார்.

## மொங்கோலிய அமைச்சர் இலங்கைக்கு விஜயம்!

(லண்டன்)

மொங்கோலிய மக்கள் குடியரசைச் சேர்ந்த பிரதியமைச்சர் தீ. வுஸ்வோயின் இலங்கை விஜயம் மேற்கொண்டுள்ளார்.

மொங்கோலிய மக்கள் குடியரசு பதினேழுஇலட்சம்மக்கள் தொகையைக் கொண்டது. இதுசோவியத்யூனியனுக்கும் சீனாவுக்கும் இடையே உள்ளது.

## இவருக்காக பிரார்த்தனை

(புலோலி)

சமூகத் தொண்டரும் துன்னாலையைச் சேர்ந்தவருமான பயிர்ச் செய்கை உத்தியோகத்தர் திரு. சண்முகம் செந்துராசா சுகத்துடன் திரும்ப இறைவனைப் பிரார்த்தித்து அல்லையம்பதி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானத்தில் ''மௌனப் பிரார்த்தனை'' யொன்று கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இவ் அமைதிப் பிரார்த்தனையில் பெருந்திரளான சிறுவர், சிறுமியர் உட்பட ஆண்களும் பெண்களும் கலந்து கொண்டு பிரார்த்தித்தனர். ஆலயத்தில் விசேட பூசைகளும் இடம் பெற்றன.

## கலைப் பொருட்களின் பெறுமதி மிகப் பெரிது

(சென்னை)

தமிழக ஆலயங்களில் உள்ள கலைப்பொருட்களின் பெறுமதி பத்தாயிரம் கோடி ரூபா எனத் தெரிவிக்கப்படுகிறது.

தஞ்சாவூரில் உள்ள ஆலயங்களில் மட்டும் மூவாயிரத்து ஐநூறு கோடி ரூபா பெறுமதிமிக்க கலைப்பொருட்கள் இருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளன.

## கடும் மோதல்

(ஜொஹனஸ்பேக்)

தென்னாபிரிக்காவில் பாதுகாப்புப் படையினருக்கும் வெள்ளையரல்லாதோருக்கும் இடையே நிகழ்ந்தகடும்மோதலில் 11பேர் மடிந்தனர்.

## முதலீடுகள் திரும்ப பெறப்படும்

(லண்டன்)

கலிபோர்ணியா மாநிலம் தென்னாபிரிக்க கம்பனிகளில் முதலீடு செய்துள்ள பல கோடி ரூபா பெறுமதியான முதலீடுகளைத் திரும்பப்பெற்றுக்கொள்ளவுள்ளது.

## வகையாக மாட்டினர்

(சங்கானை)

வட்டுக்கோட்டை மேற்கு கிராம சேவை அலுவலர் பிரிவில் வெளிநாடுகளில் வசதியாக நல்ல உழைப்புடன் வாழும் குடும்பத்தினர் உண்மைகளை மறைத்து சிலர் உணவு முத்திரைகளைப் பெற்றமையை அறிந்த கிராமசேவை அலுவலர் திரு கதிரவேலு சிறிகரன் உடன் மேற்கொண்ட நடவடிக்கைகளையடுத்து அது தடுக்கப்பட்டது.

இதனால் ஏற்படும் பாதிப்புகளை அவர் விளக்கிக் கூறியதனால் பலர் திரும்ப தாம் பெற்ற வறுமை நிவாரண திட்ட உணவு முத்திரைகளைக் கையளித்து தமது தவறை ஏற்றுக்கொண்டனர்.

## கௌரவிப்புவிழா

(அரியாலை)

'எனக்குக் கிடைக்கப்பெற்ற வடமராட்சி விவாகப் பதிவாளர் நியமனம் மூலம் வறுமைப்பட்ட மக்களுக்கும், கல்வியறிவற்ற மக்களுக்கும் சேவை ஆற்றுவேன். தனிப்பட்ட முயற்சியால் இப்பதவி எனக்குக் கிடைக்கவில்லை. சட்டத்திற்கும், ஒழுங்கிற்கும் அமைய என் கடமைகளை ஆற்றுவேன்.'

இவ்வாறு வடமராட்சி விவாகப் பதிவாளராக நியமனம் பெற்றதிரு. கி. பவானந்தன் அவரைக்கௌரவித்து வழங்கப்பட்டதேநீர் விருந்து வைபவத்தில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

இவ் வைபவம் அல்வாய் மனோகரா கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் ஆசிரியர் திரு. செ. சதானந்தன் தலைமையில் நடைபெற்றது.

இவ்வைபவத்தில் வடமராட்சியைச் சேர்ந்த பல சனசமூக நிலையங்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். திருவாளர்கள் சி. வன்னியகுலம், தி கலாமணி, தெணியான், க. சின்னராசா, எஸ். சிவகுருநாதன், க. இராஜேந்திரன் ஆகியோர் உட்பட மற்றும் பலரும் உரையாற்றினர்கள். திரு. எஸ். சத்தியநாதன் நன்றியுரை ஆற்றினார்.


## வெளிநாட்டு பிரயாண ஒழுங்கு வேலைவாய்ப்பு விசாவுடன்

அபுதாபி: பாம் தொழிலாளர், மேசன், தச்சுத் தொழிலாளர், பிளம்பர் நேரடியான பிரயாணம்

குவைத்: ஒயில் கம்பெனி உதவியாளர்கள். விரைவான பயண ஒழுங்கு.

சவூதி: ஹோட்டல் பணியாட்கள் (Saudi Catering) Cook Helpers, உபசரிப்பாளர், ஆஸ்பத்திரி பெண் பணியாட்கள்.

ஈருக்: நிர்மாண வேலைத்துறையினர், விமான நிலைய கிளீனேஸ் பெண்கள்.

வீட்டுப் பணிப்பெண்களாக செல்ல விரும்புவோர் நாடுகளை தெரிவு செய்யலாம்.

பிரயாண ஒழுங்குகள் சரியான ஒப்பந்தத்துடனும் உத்தரவாதத்துடனும் செய்யப்படும்.

**R. K. பரமசுவாமி**

ஆஸ்பத்திரி லேன்,
இணுவில் மேற்கு,
இணுவில்.

R/25361


### பல்லவி

நானிலம் போற்றும் நாராயணா – நமக்கு
நன்மையெல்லாம் தரும் நாரணனே (நானிலம்)

### அனுபல்லவி

வில்லினைக்கைவிட்ட பார்த்தனுக்கு – உயர்
கீதை தனைச் சொன்ன மாதவனே (நானிலம்)

### சரணம்

பாரினில் பக்தரைக் காப்பவனே
பரம பதம் அருளும் பரந்தாமா
தேரினில் எழுந்தருள் தெய்வம் நீயே
பொன்னாலை மேவிய பெருமானே (நானிலம்)

ப. சிவஞானசுப்பிரமணியம்

ஈழமுரசு

## கொழும்பு பஸ் விபத்தில் மூன்று இராணுவத்தினர் படுகாயம்

கொழும்பு, கொம்பனித்தெரு வாக்ஸோல் வீதியில் நேற்று மாலை இடம் பெற்ற பஸ் விபத்தொன்றில் மூன்று இராணுவத்தினர் படுகாயமுற்றனர். இராணுவத்தினர் சிவில் உடையில் பயணம்செய்த பஸ் ஒன்று வீடொன்றை உடைத்துக்கொண்டு சென்று மோதுண்டதால் இந்த விபத்து நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. வீட்டுக்குள்ளிருந்த மற்றொருவரும் காயமடைய நேர்ந்தது. பத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் சிறு காயங்களுக்குள்ளாகினர்.

ஜனாதிபதிக்கு அனுப்பிய மகஜர் கேட்கிறது:

# தர்மிஷ்ட ஆட்சி நடப்பது உண்மையெனில் கோட்டை முகாமை உடன் மூடுங்கள்!

கோட்டைக்குள்ளிருக்கும் இராணுவம் கால நேரமின்றி எந்நேரமும் ஷெல் தாக்குதல்களை மேற்கொள்வதால் அவை அப்பாவிப் பொதுமக்களையே தாக்குகின்றன. இந்த ஷெல்கள் மிகவும் சக்தி வாய்ந்த அழிவையே ஏற்படுத்துகின்றன.

இவ்வாறு யாழ்ப்பாண மக்கள் நடவடிக்கைக் குழுவினால் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்திடம் இம் மகஜர் ஜனாதிபதிக்கு அனுப்பிவைப்பதற்காக நேற்றுக் கையளிக்கப்பட்டது.

இம் மகஜரில் அண்மையில் இராணுவத்தினரின் ஷெல் தாக்குதல்களால் ஏற்பட்ட உயிரிழப்புக்கள் பற்றி விளக்கமாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனால் யாழ்நகரின் அன்றாட வாழ்வு குழப்பத்திலும் கலக்கத்திலும் ஊசலாடிக் கொண்டிருப்பதாகவும் இங்கு மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேலும் இம்மகஜரில் முக்கியமாகத் தெரிவிக்கப்படுவதாவது:-

யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரி கோட்டை இராணுவ முகாமிலிருந்து இருநூறு மீட்டர் தொலைவுக்குள்தான் இருக்கிறது. இந்த ஆஸ்பத்திரி கூட ஷெல் குண்டுத் தாக்குதலிலிருந்து தப்பவில்லை; தப்பவும் முடியாது.

யாழ்ப்பாணம் நீதிமன்றக் கட்டிடம் கோட்டை இராணுவமுகாமிலிருந்து நூறு மீட்டர் தொலைவில்கூட அமையவில்லை. உள்நாட்டு இறைவரித் திணைக்களம், தொழில்திணைக்களம், தொலைபேசித் தொடர்புத் திணைக்களம் போன்ற பல அரசாங்கத் திணைக்கள அலுவலகங்கள் கோட்டை இராணுவ முகாமுக்கு எதிரிலேயே அமைந்துள்ளன. மார்பு நோய் சிகிச்சை நிலையம் மற்றும் முக்கிய வர்த்தக வங்கிகள், நூல் நிலையம், பாடசாலைகள், தபாலகம், பத்திரிகை அலுவலகங்கள் யாவும் கோட்டை இராணுவ முகாமுக்கு நூறு மீட்டர் தூரத்துக்குள்ளேயே அமைந்துள்ளன. யாழ்ப்பாண பிரதான வர்த்தக நிலையங்கள் மத்திய பேருந்து நிலையம் என்பனவும் இராணுவ முகாமிலிருந்து நூற்றி ஐம்பது மீட்டர் தூரத்துக்குள்ளேயே அமைந்துள்ளன. கோயில்கள், தேவாலயங்கள், மசூதிகள் யாவும் கோட்டை இராணுவ முகாமுக்குச் சமீபமாகவே இருக்கின்றன. இடுகாடுகளும் சுடுகாடுகளும் கூட இந்த முகாமுக்குச் சமீபமாகவே அமைந்துள்ளன.

இந்நிலையில் இப்பகுதியில் எந்தத் தாக்குதல் ஏற்பட்டாலும் பொதுமக்களும் பொதுஸ்தாபனங்களுமே பாதிக்கப்படுகின்றன. இத்தகைய தாக்குதல்கள் முடிவுக்கு வருவதற்கு ஒரு அறிகுறியும் இதுவரை இல்லை. அப்பாவிப் பொதுமக்களே பலியாகிக் கொண்டிருக்கின்றார்கள்.

தங்களின் தர்மிஷ்ட ஆட்சி முறையின்படியும் வேறு எந்த முறையில் பார்த்தாலும் மனிதாபிமான அடிப்படையில் நோக்கினாலும் யாழ்ப்பாண நகரின் மத்தியில் அமைந்துள்ள இராணுவ முகாமை அகற்ற வேண்டும். அதிலும் உடனடியாக அகற்ற வேண்டும் என்பதை எவரும் ஏற்றுக் கொள்வர்.

இலங்கையில் மற்றும் பகுதிகளில் வாழும் மக்களைப் போல் தமிழ் பேசும் மக்களும் சுதந்திரமாகவும், கௌரவமாகவும் அச்சமின்றி வாழ்வதற்கு அதி உத்தமராகிய நீங்கள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

## கடலுக்குள் தாக்கப்பட்ட மீனவரைக் காணவில்லை

(வல்வெட்டித்துறை)

கற்கோட்டைக்கு நேரே கடலில் மீன் பிடித்துக் கொண்டிருந்த சமயம் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு தாக்கப்பட்ட யோசப் (26) என்ற மீனவரின் நிலைபற்றி இதுவரை எதுவித தகவலும் கிடைக்கவில்லை.

இவருடன் கடற்படையினரால் கைது செய்யப்பட்ட அன்ரன் தர்மராசா (24) என்ற மீனவர் தாக்குதலின் பின்னர் கடற்படையினரால் கடலில் தூக்கி எறியப்பட்டு ஒருவாறு நீந்தி கரையை வந்தடைந்துள்ளார்.

அன்ரன் தர்மராசா கடலில் கடற்படையினரால் தூக்கியெறியப்பட்ட சமயம் யோசேப்பும் கடலில் வீசப்பட்டதாகவும் அப்போது இவர் தாக்குதல் காரணமாக நீந்தமுடியாத நிலையிலிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இவர்களது மீன்பிடி படகு, என்ஜின் என்பனவும் கடற்படையினரால் சேதமாக்கப்பட்டுள்ளன.

மறுநாள் காலையில் யோசேப்பை தேடுவதற்கு சென்ற படகும் கடலில் இரு கடற்படைக் கப்பல்கள் நின்றதினால் தேடுதலை உடன் தொடரமுடியவில்லை. இரு கடற்படைக் கப்பல்களும் அகன்றதின் பின் அங்கு நின்ற கடற்படைப் படகுடன் தொடர்பு கொண்டு யோசப்பின் நிலை பற்றி விசாரித்தபோது அது பற்றித் தமக்குத் தெரியாது எனத் தெரிவிக்கப்பட்டதாம்.

மாகாணசபை பற்றி

## தொலைக்காட்சியில் விளக்க ஸ்ரீமாவோவுக்கு அனுமதி

மாகாணசபைகளை ஏற்படுத்தி அதிகாரத்தைப் பரவலாக்கும் அரசின் யோசனை குறித்து தொலைக் காட்சியில் விவாதமொன்றை நடாத்துவதற்கு ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திகொடுப்பதற்குஅரசு தயாராக இருப்பதாக இராஜாங்க அமைச்சர் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் சம்பந்தமாக திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா விடுத்த கோரிக்கைக்கு அமைச்சர் எழுதிய பதில் கடிதத்திலேயே இந்த தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"நீங்கள் தொலைக் காட்சியில் விவாதம் நடத்துவதற்கு ஒரு மணித்தியால சந்தர்ப்பம் தரலாம். இந்த விவாதத்தின் போது அரசியல் கட்சிகளின் மகாநாட்டில் பங்குபற்றிய ஏனைய கட்சிகளும் பங்குபற்றலாம். இது குறித்து தங்களுக்கு வசதியான திகதியொன்றை எனக்கு அறியத்தாருங்கள்" என அமைச்சர் அல்விஸ் திருமதி பண்டாரநாயக்காவிற்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### இரத்த தான ...

களில் இரத்ததான ஏற்பாடுகளை யாழ் அரசினர் வைத்தியசாலை நோயாளர் நலன் புரிச் சங்கம் செய்துள்ளது. கைலாச வாகனத் திருவிழா, சப்பரத் திருவிழா, பூங்காவனத் திருவிழா நாட்களில் நல்லூர் பின்வீதியில் அமைந்துள்ள மங்கையற்கரசி வித்தியாலயத்தில் இரத்த தானம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

### 50 சத...

தற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் முழுமையான திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு மக்களின் பூரண ஒத்துழைப்பு வேண்டுமென்றும், இது தொடர்பாக முன்னணி வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பெண்கள்...

'கூலிப்படையேவெளியேறு', 'மண்மக்களைக்கொல்வது தான் தர்மிஷ்டமா', 'அனாதைகளுக்கும் விதவைகளுக்குமா மாகாண சபை', போன்ற பல்வேறு சுலோகங்கள் ஊர்வலத்தில்கொண்டுசெல்லப்பட்டன.

யாழ். மக்கள் நடவடிக்கைக் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட இவ் ஊர்வலத்தில் அன்னையர் முன்னணி, தமிழ்மகளிர் அவை போன்ற அமைப்புக்களும் கலந்து கொண்டன. 'ரெஸோ' அவசர மருத்துவ சேவைப்பிரிவு ஆகியவற்றின் அம்புலன்ஸ்களும் ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களின் பாதுகாப்பிற்காக சேவையில் ஈடுபட்டன.

இதே வேளையில் யாழ். வர்த்தகர் சங்கம்விடுத்திருந்தவேண்டுகோளை அடுத்து யாழ்நகரிலுள்ள கடைகளும் நேற்று பூட்டப்பட்டு கடையடைப்பு மேற்கொள்ளப்பட்டது.

### வயாவிளான்...

முகாமில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பாரிய வாகனங்களும் கொண்டு செல்லப்படுகின்றன.

எதிர்வரும் திங்கட்கிழமை மூன்றும் தவணைக்காக வயாவிளான் மகா வித்தியாலயத்தைத் திறப்பதற்கு ஏற்றவகையில் முகாம் மூடப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

### பாடசாலைகளை..

சில பாடசாலைகள் ஆலய உற்சவ தேவைகளுக்காக பயன்படுத்தப்படுவதாலும், சில பாடசாலை மாணவரும் ஆசிரியரும் திருவிழா முடியுமட்டும் விரதம் அனுஷ்டிப்பதாலும், சில மாணவர் திருவிழாவையொட்டிய தொண்டர் சேவைகள், சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ், சாரணர், இந்து இளைஞர் பேரவை போன்றவற்றில் ஈடுபட்டுள்ளதாலும் இப்பாடசாலைகளை முதலாம் திகதி ஆரம்பிக்க முடியாதுள்ளது.

செப்டம்பர் 8ந்-திகதி இவை மீண்டும் ஆரம்பமாகும்போது ஐந்து சனிக்கிழமைகளில் வகுப்புக்களை நடாத்தி முதல் தவணை லீவு நாட்களை பயன்படுத்தவேண்டும் எனவும் கல்விப் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஷெல் தாக்கிய முஸ்லிம் பெண் மரணமானார்

(வண்ணார்பண்ணை)

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்நகரில் இடம்பெற்ற ஷெல் தாக்குதலினால் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களில் முஸ்லிம் பெண்மணி ஒருவர் நேற்று மரணமானார்.

பொம்மைவெளியைச் சேர்ந்த நஸார் குல்சூம் (27) என்றவரே இவ்வாறு மரணமானவராவர். இவரது மரண விசாரணை நேற்று நடைபெற்றபின் சடலம் உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

## பென்ஷன் திகதிகள்

தவிர்க்க முடியாத காரணங்களால் நிறுத்தி வைக்கப்பட்ட தபாற்கந்தோர் மூலம் வழங்கப்படும் ஆகஸ்ட் மாத ஓய்வூதியம் பற்றிய விபரங்கள் வருமாறு:

29-ம் திகதி வெள்ளி: யாழ்ப்பாணம், கைதடி, புங்குடுதீவு.

1-ம் திகதி திங்கள்: பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, சங்கானை, கொடிகாமம், அளவெட்டி.

2-ம் திகதி செவ்வாய்: சுன்னாகம், அனலைதீவு, நயினாதீவு, நெடுந்தீவு, கொக்குவில்.

3-ம் திகதி புதன்: கரவெட்டி, ஊர்காவற்றுறை, அச்சுவேலி, வசாவிளான்.

### நேற்றிரவும் ..

பிரமணியம் பூங்காவில் பதுங்கியிருந்ததைத் தொடர்ந்து போராளிகள் தாக்குதல் நடத்தியதால் மீண்டும் முகாமுக்குள் திரும்பினர்.

இராணுவத்தினர் கோட்டை மூலைகளில் பொருத்தப்பட்டிருக்கும் அதிசக்திவாய்ந்த மின் விளக்குகளை அணைத்துவிட்டே வெளியேறினர். மீண்டும் கோட்டைக்குள் சென்ற இராணுவத்தினர் அங்கிருந்து சரமாரியாக நகரை நோக்கி 'ஷெல்' தாக்குதல்களையும் துப்பாக்கி வேட்டுக்களையும் தீர்த்தனர்.

### ஜனாதிபதியைச் ...

ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுடன் இது தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு பிரதிநிதிகள்குழுவொன்றை அனுப்பிவைக்குமாறு ஜனாதிபதி செயலகத்தினால் கேட்கப்பட்டது. இச்சந்திப்பு இடம்பெறும் திகதி பின்னர் ஜனாதிபதி செயலகத்தினால் அறிவிக்கப்படுமெனவும் சந்திப்பில் கலந்துகொள்பவர்களை தயாராக இருக்குமாறு கேட்கப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இதேவேளையில் ஜனாதிபதியைச் சந்திப்பதா இல்லையா என்பதுபற்றி மக்கள் நடவடிக்கைக்குழு ஏகமனதான முடிவெதனையும் இதுவரை எடுக்கவில்லை.

### வெள்ளி...

படும் இப்புகையிரதம் இரவு 8 05க்கு மருதானையை அடையும். வாரத்தின் சனி, திங்கள், செவ்வாய், புதன், வியாழக்கிழமைகளில் வடபகுதிக்கான புகையிரத சேவை தற்பொழுது நடைபெறும் நேர அட்டவணையின்படி வவுனியா வரை நடைபெறும்.

## மரண அறிவித்தல்

**திருமதி அப்பாத்துரைஐயா இராசம்மா**

உரும்பராய் மேற்கு, திருமதி அப்பாத்துரைஐயா இராசம்மா காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு. சு. அப்பாத்துரை ஐயாவின் அன்பு மனைவியும், கருணாகர ஐயர், ஈசுவரநாதன் (ஆசிரியர் பூநகரி மகாவித்தியாலயம்) ஆகியோர்களின் தாயாரும், கனகேஸ்வரி, கிருபாசக்தி என்பவர்களின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 28.8.86 வியாழக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் உரும்பராயில் நடைபெறும்.

தகவல்:
அ. ஈசுவரநாதன்
கருணாகரப்பிள்ளையார் கோவிலடி,
உரும்பராய்.

R/25364

"ஈழமுரசு" சாயிபாபா அட்வர்டைசிங் அசோஸியேற்ஸ் ஸ்தாபனத்தாரால் 140, நாவலர் வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 28-8-1986 வியாழக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 22437